# அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)


(தேசிய தர மறுமதிப்பீட்டில் மூன்றாம் சுற்றில் $B^{++}$ தரம் பெற்றது)

(தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரசு உதவிபெறும் கல்லூரி )

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)

சின்னக்கலையம்புத்தூர் - 624 615

பழனி வட்டம். திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு

Web : www.apacwomen.ac.in

E-mail : apacwprincipal@gmail.com

☎ (O) 04545 – 255128




# தகவல் தொகுப்பு

## (பி.ஏ.,பி.எஸ்ஸி., பிகாம்., பி.காம் (சி.ஏ)

## எம்.ஏ., எம்.எஸ்ஸி.,

## 2022-2023

அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தர மறுமதிப்பீட்டுக் குழுவின் மூன்றாம் சுற்றில் $B^{++}$ தரம் பெற்ற அரசு உதவிபெறும் கல்லூரி.

தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் கல்லூரி ஆட்சிக்குழுவின் தலைவராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலர்/தக்கார் அவர்கள் இக்கல்லூரியின் தாளாளராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் துணை ஆணையர் இக்கல்லூரியின் செயலராகவும் செயல்படுகின்றனர்.

பழனி முருகன் அருளால் இக்கல்லூரியில் கற்பிக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் அனைத்திலும் வெற்றி பெற்று மாணவியர் சிறப்படைகின்றனர்.

**அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகள்**

| | | |
|---|---|---|
| இளநிலை மற்றும் இளமறிவியல் | பகுதி - 1 | தமிழ் |
| இளநிலை, இளமறிவியல் மற்றும் இளம் வணிகவியல் | பகுதி - 2 | ஆங்கிலம் |

**பட்டப்படிப்புகள் (இளங்கலை)**

| | | | |
|---|---|---|---|
| 1. இளங்கலை | தமிழ் இலக்கியம் | | |
| 2. இளங்கலை | ஆங்கிலம் இலக்கியம் | | |
| 3. இளங்கலை | வரலாறு | | |
| 4. இளங்கலை | பொருளாதாரம் | | |
| 5. இளங்கலை | வணிகவியல் | | |
| | துணைப்பாடம் | : பொது பொருளாதாரம் - I | |
| | | : பொது பொருளாதாரம் -II | |
| 6. இளங்கலை | வணிகவியல் கணினி பயன்பாடுகள் | | |
| | துணைப்பாடம் | : கணினி பயன்பாடு | |

**பட்டப்படிப்புகள் (இளமறிவியல்)**

| | | |
|---|---|---|
| 1. இளமறிவியல் | கணிதம் | (துணைப்பாடம் : வேதியியல், புள்ளியியல்) |
| 2. இளமறிவியல் | இயற்பியல் | (துணைப்பாடம் : கணிதம், வேதியியல்) |
| 3. இளமறிவியல் | வேதியியல் | (துணைப்பாடம் : இயற்பியல், கணிதம்) |
| 4. இளமறிவியல் | தாவரவியல் | (துணைப்பாடம் : வேதியியல், விலங்கியல்) |
| 5. இளமறிவியல் | விலங்கியல் | (துணைப்பாடம்: வேதியியல், தாவரவியல்) |

**பட்டப்படிப்புகள் (முதுநிலை)**

1. எம்.ஏ., தமிழ் (M.A., Tamil)
2. எம்.ஏ., வரலாறு (M.A., History)
3. எம்.எஸ்சி., விலங்கியல் (M.Sc.,Zoology )

**(விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள்)**

1. சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர்களே பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2. ஒரு விண்ணப்பத்தின் மூலம் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

3. கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், +2 மதிப்பெண் பட்டியல், சாதிச்சான்றிதழ் ஒன்று விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4. மேல் நிலைப்பள்ளிச் சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிறந்த தேதியை குறிப்பிட வேண்டும்.

5. பட்டியல் இனத்தவர்கள் (SC), பட்டியல் இனத்தவர்கள் (அருந்ததியினர்) (SCA) / பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC)/சீர்மரபினர் (DNC)/ பிற்பட்ட வகுப்பினர் (BC) மற்றும் பிற்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) சேர்ந்த விண்ணப்பதாரர்களின் சாதிச் சான்றிதழ்கள் உரிய அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

6. சரியான மதிப்பெண்களையே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிக்க வேண்டும், பரிசீலணைக்குப்பின் சரியான மதிப்பெண்கள் குறிக்கப்படவில்லை என்று தெரிய வந்தால்

   அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.

   ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவார்.

   இ) தவறான மதிப்பெண்களை குறிப்பிட்டதற்காக அவர் மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவப் படை வீரர்களின் குழந்தைகள் விண்ணப்பத்தில் இந்த விபரத்தை அதற்குரிய இடத்தில் புள்ளி விபரங்களுடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

8. சரியான விபரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

9. கல்லூரிக் கல்வி இயக்குநரக வழிகாட்டுதலின்படி மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

10. பட்டியலின (SC/ST) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக்கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை. பதிவுக்கட்டணம் ரூ.2/- மட்டும் செலுத்தினால் போதுமானது.

11. விண்ணப்பதாரரின் 3 வயது வரம்பு சலுகை அரசு விதிகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.

12. கல்லூரிச் சேர்க்கையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதைக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.

13. மாணவியர்களை கேலி (Ragging) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் மாணவிகள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.

**14. மாணவியர் சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்**

1. கடவுச் சீட்டு அளவிலான மூன்று புகைப்படங்கள்.
2. பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர் (SCA), பழங்குடியினர் (ST) மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (MBC) / சீர்மரபினர் (DNC) பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (BC) பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) ஆகியோர் அசல் சாதிச் சான்றிதழ் (சரிபார்க்க மட்டும்).
3. கடைசியாக படித்த கல்வி நிறுவனம் வழங்கிய அசல் மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழை கட்டாயம் ஒப்படைக்க வேண்டும், அசல் மாற்றுச் சான்றிதழ் திருப்பித் தரப்படமாட்டாது. எனவே தேவையான ஒளிப்படி (ஜெராக்ஸ்) நகல்களை முன் கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
4. மேற்கண்ட சான்றிதழ்களின் மூன்று ஒளிப்படி நகல்கள் (ஜெராக்ஸ் காப்பி) சமர்ப்பிக்க வேண்டும்.

15. மாணவியர்கள் சேர்க்கை பற்றிய விபரங்களை www.apacwomen.ac.in என்ற கல்லூரி இணையதளத்தில் பார்த்துக் கொள்ளவும்.

16. மாணவியர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை கல்லூரி இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து பட்டியலின (SC/ST) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணம் இன்றி பதிவு கட்டணம் ரூ.2/- மட்டும் இணைய தளம் (Online) மூலம் செலுத்த வேண்டும். இளநிலை விண்ணப்ப படிவக் கட்டணமாக ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) மற்றும் முதுநிலை விண்ணப்ப படிவக் கட்டணமாக ரூ.60/- (ரூபாய் அறுபது மட்டும்) இணைய தளம் (Online) மூலம் செலுத்த வேண்டும்.

**மாணவியர் சேர்க்கையின் பொழுது செலுத்த வேண்டிய கட்டண விபரம்: (UG)**

| | | |
|---|---|---|
| 1. சேர்க்கை கட்டணம் | : | 5.00 |
| 2. சிறப்புக் கட்டணம் | : | 329.00 |
| 3. பல்கலைக்கழக நுழைவுக்கட்டணம் | : | 195.00 |
| 4. +2 மதிப்பெண் பட்டியல் சரிபார்க்கும் கட்டணம் | : | 50.00 |
| 5. பட்டமளிப்பு விழா | : | 25.00 |
| 6. அடையாள அட்டை எழுதுபொருள் | : | 60.00 |
| 7. விபத்துக் காப்பீட்டுத்தொகை | : | 37.00 |
| 8. பெற்றோர் ஆசிரியர் கழகம் | : | 60.00 |
| 9. நாட்டு நலப்பணித்திட்டம் | : | 10.00 |

10. **ஆய்வுக்கூடக் கட்டணம்**

| | | முதன்மைப்பாடம் | துணைப்பாடம் |
|---|---|---|---|
| வணிகவியல் கணினிப் பயன்பாடுகள் | | | |
| B.Com (CA) | : | 5250.00 | |
| இளநிலை கணிதம் | : | 75.00 | |
| இளநிலை இயற்பியல் | : | 150.00 | |
| இளநிலை வேதியியல் | : | 200.00 | |
| இளநிலை தாவரவியல் | : | 225.00 | 75.00 |
| இளநிலை விலங்கியல் | : | 225.00 | 75.00 |

(மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது)

**மாணவியர் சேர்க்கையின் பொழுது செலுத்த வேண்டிய கட்டண விபரம்: (PG)**

| | | |
|---|---|---|
| 1. சேர்க்கை கட்டணம் | : | 5.00 |
| 2. சிறப்புக் கட்டணம் | : | 329.00 |
| 3. கல்விக் கட்டணம் | : | |
| M.A தமிழ் | : | 250.00 |
| M.A வரலாறு | : | 250.00 |
| M.Sc விலங்கியல் | : | 375.00 |
| 4. பல்கலைக்கழக நுழைவுக்கட்டணம் | : | 195.00 |
| 5. . பட்டமளிப்பு விழா | : | 25.00 |
| 6. அடையாள அட்டை எழுதுபொருள் | : | 60.00 |
| 7. விபத்துக் காப்பீட்டுத்தொகை | : | 25.00 |
| 8. பெற்றோர் ஆசிரியர் கழகம் | : | 60.00 |
| 9. நாட்டு நலப்பணித்திட்டம் | : | 10.00 |
| 10. **ஆய்வுக்கூடக் கட்டணம்** | | |
| முதுநிலை விலங்கியல் | : | 350.00 |

(மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது)